முருகப்பெருமான் துணை

**மகான் ஜெயமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.11.2022**, திங்கட்கிழமை

1. ஞானச்சுடரேற்றி கலிதன்னில்
நம்பிக்கையூட்டி உலக மக்களுக்கு
ஞானம் அருளும் அரங்கமகானே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள்திங்கள்
குறைவிலா வியதிகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 12 ம் நாள் 28.11.2022, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு ஜெயமுனிவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தருமநெறி காட்டும்
ஞான தேசிகனார் கொள்கை வழி
நம்பிக்கை வைத்து மக்கள்வர
4. வருகவே எல்லோருக்கும் ஞானம்
வள்ளல் தன்மையாகக் கிட்டி
தரும சேவை எங்கும் பரவி
தரணியே தருமபலம் காணும்
5. காணவே ஞானவான்களாகிட
கட்டாயம் அரங்கன் காட்டும்
தானதரும வழிகளை ஏற்று
தடையறச் செய்து பழக
6. பழகவே தயவு எனும் சக்தியும்
பரிபக்குவமும் கூடி இனிதே
உலகம் ஞானவான்கள் நிறைந்த
உயர் பூமியாக மாறி இனிதே
7. இனிதே ஞானத்தலைமை தரும்
இணையிலா மகா சக்தியாக
கனி வேலவனை வணங்கிடும்
கருணை மிக்கவர்களாக மக்கள்
8. மக்களெல்லாம் அரங்கனால் தேறி
மாற்றம்தனை உலகில் படைப்பர்
ஆக்கமான சக்திகள் அனைத்தும்
அரங்கனால் மண்ணில் வெளிப்பட்டு
9. வெளிப்பட்டு ஞான ஆட்சிக்கான
விரைந்து கால மாற்றங்கள்
தெளிவுபட சடுதி நிகழக்கூடும்
தொண்டர்கள் எனும் அரங்கன்

10. அரங்கன் ஞானப் படைகள்
ஆற்றல்பட வெற்றிவேல் வீரவேல் என
வரங்கள் தனை இன்னும் மிகுதிபட
வடிவேலன் சக்தியாக அடைந்து

11. அடைந்து ஞான ஆட்சிதனை
அகிலம் வியக்க படைப்பர்
தடையற உலகமாற்றம் புரிவர்
தாமுரைத்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–